பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 06 2026** **7 15**

**திங்கட்கிழமை** **காலை**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவர்களிடையே ஆக்கப்பூர்வமான சிந்தனை, அறிவியல் மனப்பான்மை மற்றும் தொழில்முனைவு உணர்வை வளர்ப்பதில் உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சி தொடர்பாக புதுதில்லியில் இன்று நடைபெறும் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

3. நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் ரயில்வே கட்டமைப்புகளும் சேவைகளும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

5. நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் சில இடங்களில் அடுத்த சில நாட்களுக்கு அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மாணவர்களிடையே ஆக்கப்பூர்வமான சிந்தனை, அறிவியல் மனப்பான்மை மற்றும் தொழில்முனைவு உணர்வை வளர்ப்பதில் உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் ஜபல்பூரில் உள்ள ராணி துர்காவதி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், எந்தவொரு தனிநபர் அல்லது சமூகத்தின் வளர்ச்சிக்குக் கல்வியே மிகச் சிறந்த வழியாகும் என்று குறிப்பிட்டார்.

கல்வியையும் திறமையையும் தனிப்பட்ட வெற்றிக்காக மட்டுமல்லாமல், சமூகத்தின் நலனுக்காகவும் பயன்படுத்த வேண்டும் என்று மாணவர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

பழங்குடியின சமூகத்தின் கல்வி வளர்ச்சி மிகவும் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

பழங்குடியின இளைஞர்கள் நவீன வளர்ச்சியில் பங்களிப்பதற்கான வாய்ப்புகளை நாம் கூட்டாக உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

பழங்குடியின சமூகத்தின் பாரம்பரியத் திறன்கள் மற்றும் அறிவு பரப்பப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மாணவர்களுக்குக் கல்வி வழங்குவதைத் தாண்டி, உயர்கல்வி நிறுவனங்கள் புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கான முக்கிய மையங்களாகவும் செயல்பட வேண்டும் அவர் கூறினார்.

இந்திய கலாச்சாரம், மரபுகள், இந்திய மொழிகள் ஆகியவை மீது மாணவர்களிடையே பெருமித உணர்வை ஏற்படுத்துவதும் உயர்கல்வி நிறுவனங்களின் பணியாக அமைய வேண்டும் என்று திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சி தொடர்பாக புதுதில்லியில் இன்று நடைபெறும் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

தனியார் ஊடக நிறுவனம் சார்பில் இந்த உச்சிமாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் உத்திசார் வளர்ச்சி, பொருளாதார உறுதித்தன்மை, தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நாட்டின் வலிமை ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விரிவான விவாதங்கள் நடைபெறும்.

தேசமே முதன்மையானது என்ற கொள்கையை அடிப்படையாக் கொண்டு நடைபெறும் இந்த மாநாட்டில் மத்திய அமைச்சர்கள், மாநிலங்களின் முதலமைச்சர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை பிரதிநிதிகள், கண்டுபிடிப்பாளர்கள், கலாச்சார மற்றும் திரைத்துறையினர் பங்கேற்கின்றனர்.

சுயசார்பு, உலகளாவிய வர்த்தகம், புத்தாக்கச் சூழல், பாதுகாப்புத் துறை உற்பத்தி, நிலையான வளர்ச்சி, கலாச்சாரம் போன்ற கருப்பொருள்கள் குறித்தும் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் ரயில்வே கட்டமைப்புகளும் சேவைகளும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் உள்ள கதிபுரா ரயில் நிலையத்திலிருந்து ஜெய்ப்பூர் - தர்பங்கா இடையிலான அம்ரித் பாரத் விரைவு ரயிலை, அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மாவுடன் இணைந்து அவர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே அமைச்சர், ராஜஸதானின் சிகார் மாவட்டத்தில் உள்ள சுந்தர்புராவில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

ஜெய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள ரயில் பராமரிப்பு முனையம் ரயில்வே உள்கட்டமைப்பை கணிசமாக வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுமார் 450 ரயில்களைப் பராமரிக்கும் திறன் கொண்ட இந்த முனையம், ரயில்களின் இயக்கத் திறனை அதிகரிப்பதோடு பயணிகள் சேவைகளையும் மேம்படுத்தும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ராஜஸ்தான் முதலமைச்சர் பஜன் லால் சர்மா, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் ரயில்வேதுறை குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் சந்தித்து வருவதாகக் கூறினார்.

ரயில்வே கட்டமைப்பின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகளால் ராஜஸ்தானில் வர்த்தகம், சுற்றுலா, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை மேம்பட்டுள்ளதாக திரு. பஜன்லால் சர்மா தெரிவித்தார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் மறுதேர்வு நாடு முழுவதும் நேற்று சுமூகமாக நடைபெற்றதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த **5** ஆயிரத்து **440** மையங்களில் சுமார் **20** லட்சம் பேர் இந்த தேர்வை எழுதியதாக சமூக வலைதளத்தில் அந்த முகமை கூறியுள்ளது.

உள்துறை அமைச்சகம், சுகாதார அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், கல்வி அமைச்சகம், அஞ்சல்துறை, விமானப்படை உள்ளிட்டவற்றின் கூட்டு முயற்சிகளால் தேர்வு சுமூகமாக நடத்தப்பட்டதாகவும், மாநில அரசுகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அந்த முகமை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் இந்த மறுதேர்வு நடத்துவதில் **7** லட்சம் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டதாகவும் தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

<<<<>>>>

ஆந்திராவில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த **2** ஆண்டுகளில் மேற்கொண்ட சாதனைகள் குறித்து அனைத்து

துறைகளின் சார்பிலும் அறிக்கை வெளியிடப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

அமராவதியில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்திய அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரத்துறை தொடர்பான முதல் அறிக்கை இன்று வெளியிடப்பட உள்ளதாக அவர் கூறினார்.

அரசின் நலத்திட்டங்கள், வளர்ச்சி தொடர்பான முன் முயற்சிகள் ஆகியவற்றை இந்த அறிக்கைகள் வெளிப்படுத்தும் என்று திரு. சந்திரபாபு நாயுடு குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தலைமை வகிக்கவுள்ளார்.

இக்கூட்டத்தில், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

'இன்றைய உலகம் எதிர்கொள்ளும் புதிய வகையிலான பாதுகாப்பு சவால்கள்' என்ற கருப்பொருளில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

பாதுகாப்புச் சவால்களின் தன்மை குறித்தும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் புதிய தொழில்நுட்பங்களின் பங்கு குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசனை நடத்தப்படும்.

பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பாகவும், நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டில் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாகவும் பிரிக்ஸ் கூட்டுப் பணிக்குழுக் கூட்டங்களில் எட்டப்பட்ட முடிவுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்படும்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

இதுதொடர்பாக் மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, விவசாயிகள், பெண்கள் என அனைத்து தரப்பினரின் நலனிலும் மாநில அரசு அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

சட்ப்பேரவை நடவடிக்கைகளை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிகள் அறிவித்திருப்பது துரதிருஷ்டவசமானது என்று அவர் கூறினார்.

அவை புறக்கணிப்பை கைவிட்டு எதிர்க்கட்சிகள் ஆக்கப்பூர்வமான விவாதங்களில் பங்கேற்க வேண்டும் என்று திரு. ஏக்நாத் ஷிண்டே கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

மாநிலத்தில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பிறகு நடப்பு நிதியாண்டுக்கான முழுமையான பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்பட உள்ளது.

மாநில நிதியமைச்சர் திரு. ஸ்வப்பன் தாஸ்குப்பதா தாக்கல் செய்ய உள்ள பட்ஜெட்டில், மாநிலத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு அறிவிப்புகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

மும்பை சர்வதேச திரைப்பட விழா நேற்று மாலை நிறைவடைந்தது.

7 நாட்கள் நடைபெற்ற இந்த விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் மகாராஷ்டிர ஆளுநர் திரு. ஜிஷ்னுதேவ் வர்மா, தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு. பிரபாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

சர்வதேச யோகா தின கொண்டாட்டங்கள் பல்வேறு நாடுகளிலும் சிறப்பாக நடைபெற்றன.

இஸ்ரேலில் டெல்அவிவில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

ஜெருசலேம், திமோனா, Ashdod உள்ளிட்ட இஸ்ரேலின் பல்வேறு நகரங்களிலும் யோகா தின நிகழ்வுகள் நடைபெற்றன.

நேபாளத்தின் காத்மாண்டு உள்ளிட்ட 11 நகரங்களில் இந்திய தூதரகம் சார்பில் யோகா நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் சில இடங்களில் அடுத்த சில நாட்களுக்கு அதிகனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களில் சிலஇடங்களில் 27-ம் தேதி வரை மிக கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், மேற்குவங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சில இடங்களிலும் கனமழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா, பீகார், கேரளா, கோவா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, ஒடிசா, தெலங்கானா ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இமாச்சலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் சில இடங்களில் இன்று இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகள் மற்றும் உத்தரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகள் மற்றும் வடக்கு உள் கர்நாடகம் ஆகிய பகுதிகளில் வெப்பம் அதிகரித்துக் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஈரான் உடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vanes** கூறியுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் முன்னேற்றம் ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<The End>>>>**